# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் **41**

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

அரசு வேலைவாய்ப்புகள், கல்விக்கூடங்கள், சட்டமன்றம், நாடாளுமன்றம் ஆகியவற்றில் பார்ப்பனரல்லாத வகுப்பு மக்களுக்கான பிரதிநிதித்துவத்தை வென்றெடுப்பதே நீதிக்கட்சியின் தலையாய நோக்கம். 1917-இல் கோயம்புத்தூரில் நடைபெற்ற முதல் பார்ப்பனரல்லாதார் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், 1920-ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் பிரச்சார முழக்கங்களாகவும் மாறின. பனகல் அரசர் ராமராய நிங்கர் தலைமையேற்று நடத்திய இம்மாநாட்டில், தியாகராயர், டி.எம்.நாயர் உள்ளிட்ட நீதிக் கட்சித் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

மாநாட்டின் இரண்டாம் நாளில் (20-ஆகஸ்ட் 1917) "மத்திய, மாகாண சட்ட மன்றங்களை விரிவுபடுத்தி, அனைத்துச் சமூகங்களுக்கும் அவர்களின் மக்கள்தொகைக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும், வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்த திறமையான விண்ணப்பதாரர்கள் ஒரு இடத்திற்கு விண்ணப்பித்தால், அந்த இடத்தை அரசு சேவைகளில் இதுவரை உரிய பிரதிநிதித்துவம் இல்லாத சமூகத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரருக்கு வழங்கவேண்டும்.

எந்தக் குறிப்பிட்ட அரசுத் துறையிலும் 40 விழுக்காட்டிற்கு மேற்பட்ட இடங்களை ஒரே சமூகத்தினர் ஆக்கிரமிக்காமல் இருக்கும் வகையில், அரசு வேலைகளை அனைத்துச் சமூகத்தினருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும்" என்பது உள்ளிட்ட மிக முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அனைத்துத் துறைகளிலும் பார்ப்பனரல்லாத வகுப்பினருக்கு உரிய பிரதிநிதித்துவம் என்ற இலட்சியத்தை, தேர்தல் வாக்குறுதியாக மாற்றிய உத்தி, நீதிக்கட்சியின் வெற்றிக்கு மிக முககியமான காரணமாக இருந்தது. இத்தீர்மானங்களே எதிர்காலத்தையும் கட்டமைத்தன. இந்தத் தீர்மானங்களுக்கு விதை 1916-இல் வெளியிடப்பட்ட பார்ப்பனரல்லாத கொள்கை அறிக்கையில் போடப்பட்டது.

"மக்கள்தொகையில் குறைந்த அளவுள்ள பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாத மக்களை விட, கூடுதலான கல்வி, ஆங்கிலக் கல்வி பெற்றுள்ளனர் என்ற ஒரே காரணத்திற்காக அனைத்து அரசுப் பணிகளையும் - அவை உயர்நிலைப் பதவியாக இருந்தாலும் சரி, கீழ்நிலைப் பணியாக இருந்தாலும் சரி - ஆக்கிரமித்துக் கொள்ள எவ்வாறு அனுமதிக்கப் படுகிறார்கள் என்பதுதான் நமக்குப் புரிய வில்லை" என்று தூவப்பட்ட விதை பெரிய மரமாக வளர்ந்தது.

## நீதிபதி மில்லர் குழு

இரட்டை ஆட்சி முறையில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்த நீதிக்கட்சி தனது கொள்கை முழக்கங்களை சட்டமன்றத்தில் சட்டங்களாக மாற்ற முயன்றது. இதே காலகட்டத்தில், மைசூர் மாகாணத்தில் நீதிபதி மில்லர் குழு அளித்திருந்த பரிந்துரைகள் கவனம் பெற்றன. அவற்றை சென்னை மாகாணத்தில் நிறைவேற்ற நீதிக்கட்சித் தலைவர்கள் விரும்பினர். 5-8-1921 அன்று சென்னை மாகாண சட்டமன்றத்தில் நீதிக்கட்சியின் ஓ.தணிகாசலம் செட்டியார் மில்லர் குழு பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை முன்வைத்தார்.

அந்தத் தீர்மானம் "100 ரூபாயை விடக் கூடுதலான மாத சம்பளம் கொண்ட அலுவலகங்களில் 66%, 100 ரூபாயை விடக் குறைவான மாத சம்பளம் கொண்ட அலுவலகங்களில் 75% இடங்களை, இன்றிலிருந்து ஏழு ஆண்டுகளுக்குள் பார்ப்பனரல்லாத சமூகங்களைச் சேர்ந்தவர்கள் (கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் உட்பட) பெறும் வகையில், அவர்களுக்கு அரசுப்பணி நியமனங்களில் முன்னுரிமை அளிக்குமாறு, பணி நியமன அதிகாரம் பெற்ற அனைத்து அதிகாரிகள், அமைப்பு, அல்லது அத்தகைய அதிகார அமைப்புக்கு உத்தரவிட வேண்டும். அத்தகைய பார்ப்பனரல்லாத விண்ணப்பதாரர்கள், பார்ப்பன விண்ணப்பதாரர்களை விடக் குறைவான தகுதி பெற்றவர்களாக இருந்தாலும், பார்ப்பனரல்லாதவர்களை நியமிக்கும் வகையில், விதிமுறைகளை வகுக்க வேண்டும்" என்றும் அரசுக்குப் பரிந்துரைத்தது.



1920-களில் எடுக்கப்பட்ட படம் : தியாகராய செட்டியார் நடுவில் அமர்ந்துள்ளார் (சிறுமிக்கு வலப்புறம் இருப்பவர்). அவருக்கு வலப்புறம் இருப்பவர் ஆற்காடு ராமசாமி முதலியார். பனகல் அரசர், சிங்கம்பட்டி ஜமீன்தார் மற்றும் வெங்கடகிரி அரசர் ஆகியோர் உடனிருக்கின்றனர்.

# மாற்றம் பிறந்த நாள்!



ஓ.தணிகாசலம் செட்டியார்

## காரசாரமான விவாதம்

தணிகாசலம் செட்டியார் "அரசு நிர்வாகத்தில் உயர் பதவிகளைப் பிடித்துக்கொண்ட பார்ப்பனர்கள் கடந்த பல ஆண்டுகளாகப் பணி நியமனத்திலும், பதவி உயர்விலும் பார்ப்பனரல்லாதவர்கள் இடம்பெறுவதைத் தடுத்து வருகின்றனர். இந்தத் தீர்மானம் பார்ப்பனரல்லாத சமூகம் நீண்டகாலமாக எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும்" என்று தீர்மானத்தின் நோக்கத்தை விளக்கிப் பேசினார். அவர் முன்மொழிந்த தீர்மானத்தின் மீது காரசாரமான விவாதம் நடைபெற்றது.

வெங்கடரத்தினம் எனும் உறுப்பினர், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விஷயத்தில் காட்டப்படும் ஆர்வம் அரசுப் பதவிகளின் மீதான அளவுகடந்த ஏக்கத்தின் விளைவு அல்ல, மாறாக அத்தகைய பிரதிநிதித்துவம் பார்ப்பனரல்லாத சமூகம் கல்வியறிவு பெற உந்தும் சக்திவாய்ந்த தூண்டுதலாக இருக்கும் என்ற நம்பிக்கையில் இருந்தும், ஒட்டுமொத்த பார்ப்பனரல்லாத சமூகம், சமூக அங்கீகாரமும், உரிமையும் பெற உதவும் என்ற குறிக்கோளில் இருந்தும் பிறந்தது என்று, அழகாக பார்ப்பனரல்லாத சமூகத்தின் கோரிக்கைகளை எடுத்துரைத்தார்.

> **கடவுள் விதித்த விதி என்று சொல்லப்பட்ட சதிகாரர்களின் சதியை, மாற்றிய வரலாற்றைத் தொடங்கிய விதை அது. காலத்திற்கும் அதன் வீரியம் ஒலிக்கும்.**

## வரவேற்பு அளிக்கவில்லை

ஆங்கிலேயர்களை உள்ளடக்கிய நிர்வாகக் குழு இத்தீர்மானத்திற்கு சொல்லிக்கொள்ளும் அளவுக்கு வரவேற்பு அளிக்கவில்லை. நிர்வாகக் குழுவின் உள்துறை உறுப்பினர் ஏ.ஆர்.நாப் தீர்மானத்தை ஒருவிதக் கலக்கத்துடன் எதிர்கொண்டார். தீர்மானத்தின் மீதான விவாதம் இடைவிடாமல் தொடர்ந்தது. அதன் விளைவாக பின்வரும் மாற்றங்களுடன் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது:

"அரசுப் பதவிகளில் பார்ப்பனரல்லாத சமூகத்தினர் பெறும் விகிதாச்சாரத்தை அதிகரிக்கும் நோக்கில், வருவாய்த் துறையின் நிலை ஆணை 128-(2)-இல் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளை அனைத்துத் துறைகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும். அரசுத் துறைகளில் முதன்மைப் பணி நியமனங்களுக்கு மட்டுமின்றி, அனைத்துத் தரநிலைப் பதவிகளுக்கும் பொருந்தும் வகையில், அரசு ஆணைகளைப் பிறப்பித்து, அவற்றை அமல்படுத்த வலியுறுத்த வேண்டும் என்றும், இந்த நோக்கத்திற்காக தொடர்புடைய துறைத் தலைவர்கள் அரையாண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் அத்தகைய அறிக்கையை சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்றும் நிர்வாகக் கவுன்சில் அரசுக்குப் பரிந்துரை செய்கிறது."

## சுவைமிகு காயும் கனியும்

ஒருமனதாக சட்டமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானம் எதிர்காலத்தைக் கட்டமைத்த அரசாணையாக 'திராவிட மாதம்' என்று இன்று நாம் பெருமையோடு அழைக்கும் செப்டம்பர் மாதம் 16 ஆம் தேதி அன்று மாறியது. பல்வேறு சாதிகள், சமூகங்களுக்கிடையில் பணி நியமனங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை நிலைப்பாட்டின் அடிப்படையில், வருவாய்த் துறைக்குப் பரிந்துரைக்கப்பட்ட நிலை ஆணை எண்-128-(2)-இல் கூறப்பட்டுள்ள விதிமுறைகளை அரசின் பல துறைகளில் உள்ள அனைத்துத் தரநிலை வேலைவாய்ப்புகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று வகுப்புவாரி ஆணை உத்தரவிட்டது. கோடிக் கணக்கான மக்களின் வாழ்வில் ஒளியேற்றிய மாற்றத்திற்கான விதையை, அந்த அரசாணை சமூகமெங்கும் அள்ளித் தெளித்தது. அவ்விதை இன்று பெரிய மரமாக வளர்ந்து, சுவைமிகு காயும் கனியும் தருகிறது.

செப்டம்பர் 15 (பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்), செப்டம்பர் 17 (தந்தை பெரியார் பிறந்தநாள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க நாள்) உள்ளிட்ட சிறப்புகளைக் கொண்ட செப்டம்பர் மாதத்திற்கு வகுப்புவாரி உரிமையை நிலைநாட்டிய வகுப்புவாரி ஆணை, கூடுதல் பெருமை சேர்க்கிறது. 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் 16 அன்று 103 ஆண்டுகளுக்கு முன்னால் வெளியிடப்பட்ட சமூகநீதி வகுப்புரிமை அரசாணைக்கு இன்று 103 வயது! இன்னும் பல ஆண்டுகாலம் அவ்விதையின் வீரியம் பேசப்படும். ஏனெனில், கடவுள் விதித்த விதி என்று சொல்லப்பட்ட சதிகாரர்களின் சதியை, மாற்றிய வரலாற்றைத் தொடங்கிய விதை அது. காலத்திற்கும் அதன் வீரியம் ஒலிக்கும்.

**...குரல் ஒலிக்கும்**

## பச்சைத் துரோகங்கள்!

மதுரை டங்ஸ்டன் கனிம சுரங்க உரிமையை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்றும், மாநில அரசின் அனுமதியின்றி எந்தச் சுரங்க அனுமதியும் வழங்கக்கூடாது என்றும் தமிழ்நாடு சட்டப்பேரவையில் டிசம்பர் ஒன்பதாம் தேதி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 'நான் முதலமைச்சராக இருக்கும்வரை இத்திட்டத்தை அனுமதிக்கப்போவதில்லை' என்பதை 'திராவிட மாடல் நாயகர்' நம் முதலமைச்சர் உறுதிபடத் தெரிவித்துவிட்டார். ஆனால், இவ்விவகாரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, கழக அரசின் மீது தார்மீகமற்ற குற்றச்சாட்டுக்களை வைக்கிறார்.

டங்ஸ்டன் பிரச்சினை முற்றிய பிறகுதான், தி.மு.க. அரசு எதிர்க்கிறது என்பது அவருடைய குற்றச்சாட்டு. "மாநில அரசின் அனுமதி இல்லாமல், சுரங்க ஏலத்தை ஒன்றிய அரசு விடலாம்" என்று கடந்த ஆண்டு சட்டத் திருத்தம் கொண்டுவந்தபோதே கழக அரசு உறுதியாக எதிர்த்தது. ஆனால், மாநிலங்களவையில் கனிம வளங்கள் திருத்த மசோதாவை ஆதரித்தது அ.தி.மு.க.. ஆதரித்துப் பேசியவர் அ.தி.மு.க. எம்.பி. தம்பிதுரை. சோற்றில் முழுப் பூசணிக்காயை மறைப்பதுபோல, நாடாளுமன்றத்தில் ஆதரித்ததை மறைத்துவிட்டு, இப்போது கழக அரசுக்கு எதிராக 'கம்பு சுற்றுகிறார்' பழனிசாமி.

குடியுரிமைத் திருத்தச் சட்ட விவகாரத்திலும், இதேபோலத்தான் நாடாளுமன்றத்தில் ஆதரித்து வாக்களித்தது அ.தி.மு.க. நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி குடியரசுத் தலைவருக்கு அ.தி.மு.க ஆட்சியில் அனுப்பப்பட்ட கடிதம் நிராகரிக்கப்பட்டது என்ற உண்மையையே நீதிமன்றத்தில்தான் வெளிக்கொணர முடிந்தது. இதற்கெல்லாம் உச்சமாக, 'காவிரி டெல்டா பகுதியைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் ஆக்கிவிட்டோம்' என மார்தட்டிக்கொண்டவர், எடப்பாடி பழனிசாமி. ஆனால், அப்படியொரு முன்மொழிதலைத் தங்களுக்கு அனுப்பவே இல்லை என ஒன்றிய அரசு ஒரே அடியாக மறுத்துவிட்டது.

இப்படி, எடப்பாடி பழனிசாமியின் 'கபட நாடகங்கள்' அனைத்தும் அம்பலப்பட்டு, நான்காண்டு ஆட்சியில் அவர் செய்த 'துரோக வரலாறுகள்' பக்கம் பக்கமாக நீள்கின்றன. அதையெல்லாம் எண்ணிப் பார்க்காமல், டங்ஸ்டன் விவகாரத்தில் தொடக்கம் முதல் இன்றுவரை மக்கள்நலனைக் கருத்தில்கொண்டு உறுதியோடு எதிர்க்கும் கழக அரசின் மீது களங்கம் கற்பிக்கிறார், எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர். மக்கள் அதை ஏற்கப் போவதில்லை. அதே நேரத்தில் பழனிசாமியின் பச்சைத் துரோகங்களை, மக்கள் மறக்கப் போவதுமில்லை.

## ஃப்ளாஷ்பேக்





எம்.முத்துராமலிங்கம்

### 'தலைவரின் கரங்களால் சிறப்பிக்கப்பட்டேன்!'

1993-ஆம் ஆண்டு கழகத்தில் இருந்து சிலர் பிரிந்து சென்றபோது, கழகக் கட்டுப்பாட்டைக் காக்கும் வகையிலும், இளைஞர் அணியை வலுப்படுத்தும் நோக்கத்திலும் இன்றைய கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், ஒன்றுபட்ட மதுரை மாவட்டத்தின் இளைஞர் அணி அமைப்பாளராக என்னை நியமனம் செய்தார்கள். நியமிக்கப்பட்ட காலகட்டத்தில் மதுரை, தமுக்கம் மைதானத்தில் **மதுரை மண்டல தி.மு.க. மாநாடு** ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த மாநாடு வெற்றிபெற்றதைத் தொடர்ந்து, இதில் சிறப்பாக பணியாற்றிய எங்களை எல்லாம் நேரில் அழைத்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன் திருக்கரங்களால் சால்வை அணிவித்து சிறப்பு செய்தார்.

**- எம்.முத்துராமலிங்கம், மாநில இணைச் செயலாளர், கழக விவசாய அணி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### 'தமிழரசு' இதழ் பதிவு!

1975-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 'தமிழரசு' இதழ் சிறப்பு மலர் வெளியிட்டது. அதில், தமிழ்நாட்டில் மின்சாரம் பரவலான 1933-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரையான 34 ஆண்டு காலத்தில் மின்வசதி பெற்ற தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு எண்ணிக்கை 4,354. கழக ஆட்சி அமைந்த முதல் 8 ஆண்டு காலத்தில், 19,566 தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளுக்குப் புதிதாக மின்சார வசதி கொண்டு வரப்பட்டது, எனப் பதிவு செய்துள்ளது.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

**686**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131